# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : CC.72/2022 | Date:23.11.2023 |
| Deposition of Witness for | : PW4 | |
| Name | : **பழனிசாமி** | |

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

நாகிசெட்டிபட்டியில் எத்தனை ஜனங்கள் குடியிருக்கிறார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாகிசெட்டிபட்டியில் எத்தனை வீதி இருக்கிறது என்றால் மூன்று வீதி உள்ளது. கோவில் எந்த வீதியில் உள்ளது என்றால் நாங்கள் குடியிருக்கும் வீதியிலிருந்து இரண்டு வீதி தள்ளி உள்ளது. அந்த கோவிலில் பூசாரி யார் என்றால் செங்கோடன். சம்பவத்தன்று புதுவருடம் பிறக்க இருப்பதால் விழா நடத்துவதற்காக மைக்செட் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். எங்கள் பகுதியில் முக்கிய மனிதராக யார் உள்ளார் என்றால் எனது அண்ணன் தங்கராஜ் மற்றும் முத்தான் ஆகும். கார்த்திக்குமார் எனது அண்ணனுக்கு தெரியாமல் திருமணம் செய்துகொண்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அது எனக்கு தெரியும் என்றும், அதனை ஒத்துக்கொண்டால் இந்த வழக்கு பொய்வழக்கு என தெரிந்துவிடும் என்பதால் அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 31.12.2020–ம் தேதி மாலை 05.00 மணிக்கு எனது அண்ணன் மகன் பிரியதர்ஷன் கோவிலுக்கு செல்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றதாக போலீஸ் விசாரணையில் தெரிவித்தேனா என்றால் ஞாபகம் இல்லை. நானும் பிரியதர்ஷனும் இருசக்கர வாகனத்தில் மாரியம்மன் கோவில் வழியாக சென்றபோது கார்த்திக்குமார் ஆள்காட்டி விரலை காண்பித்து எப்ப இருந்தாலும் உன்னை அடிக்காமல் விடமாட்டேன் என கூறினார் என்பதை போலீசார் என்னை விசாரித்தபோது தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். கார்த்திக்குமார் மிரட்டியது சம்பந்தமாக நான் போலீசில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நாங்கள் வீட்டிற்கு சென்றதும் தங்கள் பின்னாலேயே கார்த்திக்குமார், கவின்குமார் மற்றும் பிரவீன்குமார் ஆகியோர்கள் வந்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்தேனா என்றால்

தெரிவித்தேன். வீட்டிலிருந்த பிரியதர்ஷனை கார்த்திக்குமார், கவின்குமார் மற்றும் பிரவீன்குமார் ஆகியோர்கள் கையால் அடித்ததாக போலீஸ் விசாரிக்கும்போது தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். எங்கள் வீட்டிற்கு எத்தனை வீடு தள்ளி பிரியதர்ஷன் வீடு உள்ளது என்றால் ஒருவீடு தள்ளி உள்ளது. எங்கள் வீட்டிற்கு முன்னால் உள்ள ரோடு கிழமேல் சிமெண்ட் சாலை என்றால் சரிதான். அங்கு பக்கத்திலேயே முனுசாமி, புனிதா, கண்ணாயி, துளசிமணி ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் முனுசாமி, புனிதா வீடு மட்டும் உள்ளது. நான் போலீசார் விசாரிக்கும்போது குறிப்பாக கார்த்திக்குமார் தான் பிரியதர்ஷனின் கன்னத்தில் அடித்தார் என தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்தேன். கார்த்திக்குமார் ஜாக்கெட்டை பிடித்து இழுத்தார் என்பதை போலீசாரிடம் குறிப்பாக தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். அதேபோல் கார்த்திக்குமார் பிளேடால் கிழித்துவிட்டார் என்பதையும் போலீசாரிடம் நான் தெரிவிக்கவில்லை என்றால் தெரிவித்தேன். தங்கராஜை கார்த்திக்குமார் வலதுகை விரலை பிடித்து திருகிவிட்டார் என்று குறிப்பாக போலீசாரிடம் நான் தெரிவக்கவில்லை என்றால் தெரிவித்துள்ளேன். எவ்வளவு நேரம் சம்பவம் நடைபெற்றது என்றால் சுமார் 3/4 நேரம் நடந்தது. அந்த சமயத்தில் அந்த பகுதியில் உள்ள மக்கள் அங்கு கூடிவிட்டனர் என்றால் சரிதான். ரத்தம் தரையில் சிந்திக்கிடந்தது என்றால் சரிதான். நான் உடனடியாக 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுக்கவில்லை என்றும், காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான். காவல் நிலையம் வழியாகத்தான் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். போகும் வழியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அரசுமருத்துவமனைக்கு சென்றபிறகு போலீசார் உடனடியாக வந்து விசாரித்தார்களா என்றால் இரண்டு நாட்கள் கழித்து வந்தார்கள். நான் போலீசாரிடம் நடந்த விபரத்தை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். சிகிச்சைக்கு சேர்ந்த பிறகு என்ன நடந்தது என்று மருத்துவரிடம் நான் தெரிவித்தேனா என்றால் என் மனைவி மணியம்மாள் தான் கூறினார். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். மருத்துவரிடம் தெரிவித்தபோது சம்பவம் என்ன தேதியில் எத்தனை மணிக்கு நடந்தது, எங்கு நடந்தது, யார் அடித்தார்கள், எத்தனை பேர் அடித்தார்கள் என்று மணியம்மாள் தெரிவித்தாரா என்றால் அப்போது மருத்துவர் என்னை வெளியே செல்ல சொன்னதால் நான் வெளியே சென்றுவிட்டேன் அதனால் அவர் என்ன சொன்னார் என்று எனக்கு தெரியாது. இரண்டு நாட்கள் கழித்து போலீசார்

மருத்துவமனை வந்தபோது என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார்களா என்றால் இல்லை ஊருக்கு வந்து போலீசார் என்னை விசாரித்தார்கள். அப்போது எனது வாக்குமூலத்தை பதிவுசெய்துகொண்டார்களா என்றால் பதிவுசெய்துகொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. அதை எனக்கு படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தை காண்பிக்க என்னை சொன்னார்களா என்றால் இல்லை. பொதுமக்களிடம் எனது அண்ணன் வசூலித்த பணத்திற்கு எதிரிகள் கணக்கு கேட்டார்களா என்றால் இல்லை. மேற்படி கணக்குகள் யாரிடம் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு கணக்கு கேட்டதால் ஏற்பட்ட விரோதத்தால் தான் இந்த பொய்புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவிக்கு காயத்தை நாங்களாக ஏற்படுத்திக்கொண்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து எங்களது செல்வாக்கை பயன்படுத்தி பொய்புகார் கொடுத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம். பழனிசாமி

ஒப்பம். S.R. பாபு,

நீதித்துறை நடுவர் எண்.1

சங்ககிரி.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | CC.72/2022 | Date:23.11.2023 |
| Deposition of Witness for | : | PW5 | |
| Name | : | **மாதேஸ்வரி** | |

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

போலீஸ் என்னை எந்த இடத்தில் வைத்து எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். என்னை போலீசார் விசாரித்தபோது மருத்துவமனைக்கு மணியம்மாளை நாங்கள் தான் அழைத்துச்சென்று சேர்த்தோம் என்று தெரிவித்தேனா என்றால் தெரிவிக்கவில்லை. சம்பவம் நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், கேள்விப்பட்டு தான் தெரிந்துகொண்டேன் என்றும் போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் இல்லை. சம்பவம் நடந்தபோது எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால் நிறையபேர்கள் இருந்தார்கள் எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்று தெரியாது. ஊர்ஜனங்கள் சம்பவத்தை தடுத்தார்களா என்றால் இல்லை. மருத்துவமனைக்கு நாங்கள் எவ்வாறு சென்றோம் என்றால் இரண்டு இருசக்கர வாகனத்தில் சென்றோம். சங்ககிரி காவல் நிலையம் வழியாக சென்றோமா என்றால் இல்லை. அரசுமருத்துவமனைக்கும் சங்ககிரி காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் ஒரு கிலோமீட்டர் இருக்கும். போலீசார் மணியம்மாளை விசாரிக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். எதிரிகள் ஊர் பணத்தை கொடுக்காமல் இருந்ததால் அதுசம்பந்தமாக எதிரிகள் கணக்கு கேட்டதால் அந்த விரோதத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய்புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அதுபோல ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றும் எங்களுக்கு இருந்த செல்வாக்கை

பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஒப்பம். மாதேஸ்வரி

ஒப்பம். S.R. பாபு,

நீதித்துறை நடுவர் எண்.1

சங்ககிரி.